1972 ஆகஸ்ட் 19]

வட ஆர்க்காடு மாவட்டத்தில் கலைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்கள்

* 200. வினு—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் தற்போது எத்தனைக் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள், எத்தனை கூட்டுறவு நில வள வங்கிகள் கலைக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) அவைகள் கலைக்கப்பட்ட காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்படுவதில்லை. ஆனுல் அவைகளின் நிர்வாகக் குழுக்கள்தான் கலைக்கப்படுகின்றன. 1971-ஆம் வருடம் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட குழுக்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலே நாணயச் சங்கங்கள் 3, நில வள வங்கிகள் 2.

(இ) சரியான கணக்கு இல்லாமை, தவணை கடந்த பாக்கிகள் மேல் வங்கிகள் சீராக நடைபெருமை, துணைவிதிகளைக் கடைப்பிடியாமை, இன்னும் இவைபோன்ற பல குற்றங்கள்.

திரு கே. ஏ. வகாப்: கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்டால் மறுபடியும் அவை செயல்படுகின்ற வரையில் விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறுர்கள். புதிய நிர்வாகக் குழுக்களை உடனடியாகத் தேர்ந்தெடுத்து அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்டாலும் அந்த இடத்திலே தனி அலுவலாளர் நியமிக்கப்படுகிறுர். அவர்கள் இந்தச் சங்கங்களை நடத்தி வருகிறுர்கள். தேர்தல் பற்றிச் சொன்னுர்கள். தேர்தல் விரைவிலே நடைபெற இருக்கிறது.

Price of sugarcane

* 201 *Q.*—Thiru K. T. K. THANGAMANI:
Thiru A. M. RAJA: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the price paid to sugarcane growers by the Millers is the lowest in Tamil Nadu; and

(*b*) if so, the steps taken to bring it in line with prevailing rates in other States